[1995 நவம்பர் 9

(ஆ) பர்கூரில் மலைவாழ் மக்கள் முன்னேற்ற சங்க உயர்நிலைப் பள்ளி மூடப்பட்டுள்ளது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அந்தியூர் தொகுதி, பர்கூரில் தனியாரால் நடத்தப்பட்டு வந்த மலைவாழ் மக்கள் முன்னேற்ற சங்க உயர்நிலைப் பள்ளி கடந்த ஒரு மாத காலமாய்" மூடப்பட்டுள்ளதன் காரணமாக மாணவ மாணவிகளின் கல்வி கற்கும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "உள்ளது குறித்து" என்று முடிக்க வேண்டும். அதில் இருப்பதை அப்படியே படியுங்கள்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூடப்பட்டுள்ள காரணத்தால் மாணவ மாணவிகள் கல்வி கற்க முடியாமல் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "மூடப்பட்டுள்ளது குறித்து" என்று இருக்கிறது. அதில் என்ன இருக்கிறதோ அதைத்தான் சொல்ல வேண்டும். நீங்கள் ஏதாவது ஒன்றை கையில் வைத்துக்கொண்டு படித்துக் கொண்டிருக்கக்கூடாது. அது அமைச்சருடையது. அமைச்சர் வைத்துக் கொண்டிருப்பதை நீங்கள் படித்தால் எப்படி? நீங்கள் அமைச்சர் அல்ல. மாண்புமிகு கல்வியமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

பெரியார் மாவட்டம், அந்தியூர் வட்டம், பர்கூரில் உள்ள தனியார் மலைவாழ் மக்கள் முன்னேற்ற சங்க உயர்நிலைப் பள்ளி ஒரு தனியார் சுயநிதிப் பள்ளியாகும். இப்பள்ளிக்கு அரசு நிதியுதவி ஏதும் இல்லை. ஆயினும் 6 முதல் 9 வகுப்புகளுக்கான அங்கீகாரம் தரப்பட்டுள்ளது. அப்பள்ளி மாணவர்கள் அங்கு நடத்தப்படும் ஒரு விடுதியில் இருந்து கொண்டு பள்ளியில் படிக்கின்றனர். இந்த விடுதி வெளி நாட்டினரின் நிதி உதவியுடன் நடத்தப்படுவதாக தெரிய வருகிறது. இந்த விடுதி

நடத்தப்படுவதில் அடிக்கடி நிர்வாக பிரச்சனை ஏற்படுவதால் விடுதியும் அதனைத் தொடர்ந்து பள்ளியும் பல சமயங்களில் மூடப்படுவது வழக்கமாக உள்ளது என பெரியார் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் மூலமாக தெரிய வருகிறது. மலைவாழ் பகுதியைச் சார்ந்த பள்ளி மாணவர்கள் இடையூறின்றி பள்ளி படிப்பை தொடர்ந்து படிக்க நிர்வாக ஏற்பாடுகள் செய்வது அவசியமானது என்பதால் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் ஆகியோரிடம் கலந்து பள்ளியை மீண்டும் திறக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் தொகுதி, பர்கூரில் தனியாரால் நடத்தப்பட்டு வந்த மலைவாழ் மக்கள் முன்னேற்ற சங்கத்தினுடைய உயர்நிலைப்பள்ளி ஒரு மாத காலமாக மூடப்பட்டிருக்கிறது. ஆகையினால் மாணவ மாணவிகள் கல்வி கற்க முடியாத நிலையிலே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 6-ஆம் வகுப்பு முதல் 9-ஆம் வகுப்பு வரை அரசால் அந்தப் பள்ளிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அது ஒரு சுய நிதி கல்வி நிறுவனம் ஆகும். வெளிநாட்டுக்காரர்கள் அதை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பள்ளியைப் பொறுத்தவரையில் ஏழை, தாழ்த்தப்பட்ட மக்களும், மலைவாழ் மக்களும் படிக்கின்ற காரணத்தால் அந்த மூடிய பள்ளியைத் திறப்பதற்கு—நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் இந்தக் குறிப்பிலே கூறப்பட்டுள்ளது போன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாவட்ட முதன்மை கல்வி அதிகாரி அவர்களும் சம்பந்தப்பட்டவர்களை இதுவரை அழைத்துப் பேசாத காரணத்தால் மாணவர்களுடைய கல்வித் தரம் அங்கே பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏழை எளிய மக்களின் கல்விக்காக இந்த ஆண்டு ஏறத்தாழ 2733.17 கோடி ரூபாயை செலவு செய்கின்ற தமிழக முதலமைச்சர் அவர்களுடைய நல்லாட்சியில் அந்தப் பள்ளியினை விரைவாகத் திறப்பதற்கு—எப்போது திறப்பார்கள் என்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்ததுபோல அந்தப் பள்ளி தனியாரால் நடத்தப்படுகின்ற சுய நிதிப் பள்ளியாகும். அரசின் நிதியுதவி ஏதும் அதற்கு இல்லை. அந்தப் பள்ளியைத் தொடர்ந்து அங்கே ஒரு விடுதி நடத்தப்படுகிறது. அந்த விடுதியில் மாணவ மாணவிகள் தங்கிப் படிக்கிறார்கள். விடுதியில் இருக்கின்ற நிர்வாகக் கோளாறு காரணமாக அடிக்கடி விடுதியும் மூடப்பட்டு

பள்ளியும் மூடப்படுகின்ற சூழ்நிலை அங்கே உருவாகி வருகிறது. அவர்களை அழைத்து பேசித் தீர்ப்பதற்கு முயற்சி எடுக்கும்போது நிர்வாகத்தினர் அதற்கு ஒத்துழைப்புத் தர மறுக்கிறார்கள் என்ற தகவல் கிடைத்திருக்கிறது.

முற்பகல் 11-30

இருந்தாலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரும் நிர்வாகத்துடன் நேரில் பேசி விரைவில் அந்தப் பள்ளியை திறப்பதற்காக ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, விரைவில் இந்தப் பள்ளி திறக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி: நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பினை ஏற்றதற்குப் பின்னால்தான் இந்த பர்கூர் மலைப் பகுதி, கேட்பாரற்று இருந்த பகுதியில், ஏறத்தாழ 7 தொடக்கப்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெரியசாமி, பர்கூரில் என்னென்ன இருக்கிறது என்றெல்லாம் சொல்ல வேண்டாம், விளக்கத்தைக் கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளியை விரைந்து திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் —ஒன்று அந்தப் பள்ளியினுடைய நிர்வாகம் அந்தப் பள்ளியை திறக்க முடியாது என்று சொன்னால், அந்தப் பிள்ளைகளுடைய 'ரெக்கார்டு ஷீட்'-டை அவர்களுக்குக் கொடுத்து, அருகிலேயுள்ள நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி, அங்கே சேர்க்க வைக்க வேண்டும். அல்லது அருகிலேயுள்ள அந்தியூரில் உள்ள உயர்நிலைப் பள்ளியிலே அந்தக் குழந்தைகளைச் சேர்க்க வேண்டும். குழந்தைகளை சேர்க்க வைக்காமல் இருந்தால் ஒரு ஆண்டு அவர்களுடைய கல்வி நிலையில் பாதிப்பு ஏற்படக்கூடும். சமீபத்தில் பெருமழையின்போது நான் சென்றிருந்தபோது அங்குள்ளவர்கள் இதனை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் ஏராளமான பணத்தைக் கல்விக்காக, அதுவும் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக ஏராளமான பணத்தை ஒதுக்கி உதவிகளைச் செய்து வருகிறார்கள். குறிப்பாக 5-வது முடித்த பின்னர் 6-வது படிக்க முடியாது என்று கவலைப்படுகிற ஆதி திராவிடப் பெண் குழந்தைகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கி வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பெரியசாமி, நான் அடுத்த அலுவலுக்குப் போக வேண்டும். நேரிடையாகக் கேள்வியைக் கேளுங்கள்.

1995 நவம்பர் 9]

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவாக அந்தப் பள்ளியினை திறக்க வேண்டியதன் அவசியத்தினை நீங்கள் உணர்ந்துள்ள காரணத்தினால் விரைவாக இன்னும் 10, 15 நாட்களுக்குள் திறப்பதற்கு ஒரு கமிட்டியை அமைத்து, ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக கமிட்டி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவரும், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரும் இதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களும் தொடர் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல், அந்த பள்ளியின் நிர்வாகம் பள்ளியைத் திறக்க உடன்பட்டு வரவில்லையெனில் அந்த மாணவர்களுடைய பள்ளிச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டு அடுத்த பள்ளியில் சேர்ப்பதில் எந்தத் தடையும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால் அந்தப் பள்ளியில் படிக்கின்ற பிள்ளைகளை அடுத்த பள்ளியில் சேர்ப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களும் மற்றொரு கருத்தையும் தெரிவித்து இருக்கிறார்கள். மலைவாழ் மக்கள் முன்னேற்றச் சங்கம் நடத்தும் இந்தப் பள்ளியில் பயில்கின்ற மாணவர்கள் இடையூறின்றி தொடர்ந்து கல்வி பயிலுகின்ற வகையில் அந்தியூர், பர்கூரில் இருக்கிற ஆதி திராவிட நலத் துறை நடுநிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தினால் போதும் என்று கருத்துக் தெரிவித்து இருக்கிறார்கள். அதை செய்ய வேண்டிய துறை ஆதி திராவிட நலத் துறை. ஆகவே, ஆதி திராவிட நலத் துறைக்கு பரிந்துரை செய்யுமாறு மாவட்ட ஆட்சி அலுவலருக்கும், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்களின் குழுவின் தலைவர்.